**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2025ம் ஆண்டு மார்ச் மாதம் 17-ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1-ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி எஸ்.விஜய் அழகிரி, பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

அ.வ.எண்.536/2022

வா.சா.1 சுகந்தி, க/பெ சீனிவாசன்

**குறுக்குவிசாரணை 1ம் பிரதிவாதி தரப்பில்**

நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்திருக்கிறேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் என்ன பரிகாரம் வேண்டுமென்று குறிப்பிட்டு கேட்டிருக்கிறேனா என்றால் இல்லை. 2010ம் ஆண்டு முதல் எனது தாயாரை சென்னை ராமச்சந்திரா மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்று வந்ததாக கூறியுள்ளதற்கு நான் இந்த வழக்கில் மருத்துவ ஆவணங்கள் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் செய்திருக்கிறேன். நான் மருத்துவ ஆணங்கள் தாக்கல் செய்திருப்பதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் என் அம்மாவின் சிகிச்சைக்கு இன்சூரன்ஸ் பணம் வந்துள்ளதாக கூறியிருக்கிறேன். அது யாருடைய இன்சூரன்ஸ் பணம் என்றால் என் அப்பா தான் செலவு செய்திருக்கிறார். 1ம் பிரதிவாதி கடந்த 11.06.2020ம் தேதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் எனது தாயார் 1ம் பிரதிவாதிக்கு 20.08.2018ம் தேதி எழுதி வைத்ததாக சொல்லும் உயில் செல்லத்தக்கதல்ல என நான் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன். அந்த உயில் செல்லாது என அறிவிக்க கோரி எந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் இந்த நீதிமன்றத்தில் தான் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன். வழக்கு எண் ஞாபகம் இல்லை. 2008 மற்றும் 2009ம் ஆண்டில் என் தாயாருக்கு ஈரோடு லோட்டஸ் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்திருப்பதாக சொல்லியிருக்கிறேன். எதற்காக அந்த அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்றால், என் தாயாருக்கு மோசன் பிரச்சனை இருந்தது. அதனால் குடல் இறக்கத்திற்காக ஆப்ரேசன் செய்யப்பட்டது. என் தாயாருக்கு உடலில் எந்த

பகுதியில் புற்றுநோய் ஏற்பட்டது என்றால் வயிற்றுப்பகுதியில் அவருக்கு புற்றுநோய் ஏற்பட்டது. 2016ம் ஆண்டிலிருந்தே என் தாயாருக்கு கேன்சர் டிரிண்மெண்ட் ஆரம்பித்துவிட்டோம் என்றால் சரிதான். 2010 முதல் 2018 வரை என் தாயாருக்கு சிகிச்சை செய்த மருத்துவர்கள் பெயர் சொல்லமுடியுமா என்றால் சுந்தரம் என்ற மருத்துவர் சிகிச்சை செய்தார். 2010 முதல் 2018 வரை என் தாயாரை மருத்துவ சிகிச்சைக்கு அழைத்து சென்றபோது அட்டண்டர் கையெழுத்து நான் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. என் அப்பா தான் செய்திருக்கிறார். நான் உடன் மட்டும் சென்றேன். என் தாயாரை ஈரோட்டிற்கு கூட்டி வந்தபிறகு ஈரோட்டில் எந்த மருத்துவமனையில் சிகிச்சை பார்த்தோம் என்றால், ஈரோட்டில் பார்க்கவில்லை சென்னை மருத்துவரிடம் கேட்டுக்கொள்வோம். 2ம் பிரதிவாதியான என் தந்தை இறக்கும் வரை எனக்கும் அவருக்கும் சுமூக உறவுமுறை இருந்தது என்றால் சரிதான். என் தந்தை இறக்கும் வரை அவர் மாதம் மாதம் ரூ.30,000/- பென்சன் வாங்கி வந்தார் என்றால் சரிதான். 2015ம் வருடம் 1ம் வாதியின் மகள் ரஞ்சனாவிற்கு பூப்பு நீராட்டு விழாவின் போது 2ம் பிரதிவாதி 5 பவுன் சீர் செய்தார் என்றால் சரிதான். அப்போது 1ம் பிரதிவாதி ரஞ்சனாவிற்கு 1 -1/2 பவுன் சீர் செய்தார் என்றால் சரிதான். 1ம் வாதியின் 2வது மகளான ரஞ்சனியின் பூப்பு நீராட்டு விழாவின் போது 2ம் பிரதிவாதி 5 பவுன் சீர் செய்தார் என்றால் சரிதான். இந்த விழாவிலும் 1ம் பிரதிவாதி ரஞ்சனிக்கும் 1-1/2 பவுன் சீர் செய்தார் என்றால் சரிதான். வழக்கில் என் தாயாரை சிகிச்சைக்கு சென்னைக்கு அழைத்து வரும்போது 1ம் பிரதிவாதியும், அவரது மனைவியும் எனது தாயாரை பார்த்துக்கொள்வதில்லை என்றும், வீட்டில் கூட தங்க அனுமதிக்கவில்லை என்று கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். 20.08.2018 தேதியில் என் தாயார் 1ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த உயிலில் சாட்சி கையெழுத்து செய்துள்ள தங்கராஜ் எனக்கு நன்கு தெரியும் என்றும், அவர் எனது குடும்ப நண்பர் என்றும் நான் வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சொல்லகிறேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியான என் தந்தை என்னிடமோ, எனது சகோதரியிடமோ ஒரு போதும் பணமோ, நகையோ வாங்கவில்லை என்றும், அவருக்கு வாங்கவேண்டிய தேவை இல்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால்

சரியல்ல. எனது தாயார் 1ம் பிரதிவாதிக்கு எழுதிவைத்த உயிலின் உள்ளடக்கமும், அந்த உயிலில் என் தாயார் கையெழுத்து செய்தவிவரமும் என் அப்பாவிற்கு நன்கு தெரியும் என்றால் என் அப்பாவிற்கு தெரியாது. தாவா சொத்துக்கள் முழுவதையும் பொறுத்து என் தாயார் 1ம் பிரதிவாதிக்கு உயில் எழுதிவைத்து அந்த உயில்படி தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு சென்றடைந்து விட்டது என்று என் தகப்பனார் எங்களிடம் சொன்னதால் எங்களுக்கும், எங்கள் தகப்பனாருக்கும் பிணக்கம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது தகப்பனார் எங்களுடன் கடைசிவரை நன்றாக தான் பேசிக்கொண்டிருந்தார்.

**மறுவிசாரணை இல்லை.**